முச்சந்தி முரளி



"இப்பிடி இனி ஒவ்வொருவரா அங்காலையும் இஞ்சாலையும் தாவி விளையாடப்போகினம் பாருங்கோ"


Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39 | புதன்கிழமை | ஆடி 15 ஆம் நாள்
கதிர் : 248 | 31 ஜூலை 2024 | வள்ளுவர் ஆண்டு 2055




நாடாளுமன்றத்தில்

# 92 உறுப்பினர்கள் ரணிலின் பக்கம்!

## நேற்று நேரில் ஆதரவு

கொழும்பு, ஜூலை 31

92 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று நேரில் சந்தித்துத் தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

11

## ரணிலுக்காக முட்டு: சீரமைப்பில் மொட்டு

கொழும்பு, ஜூலை 31

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் தமது கட்சியின் மாவட்டத் தலைவர்களை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கு

11

## பெரமுனவின் வேட்பாளராக தம்மிக்கவே

கொழும்பு, ஜூலை 31

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக தம்மிக்க பெரேராவே களமிறங்குவார் என்று ராஜபக்ச குடும்ப உறுப்பினரான, ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க

11

## ரணிலை ஆதரிப்பதில் தமிழர்கள் உறுதியாம்

### அமைச்சர் மனுஷ கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூலை 31

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்ற முடிவுக்கு வடக்கு - கிழக்கு மக்கள் வந்துவிட்டனர். அவர்களின் நம்பிக்கையை வென்ற தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே என்று அமைச்சர் மனுஷ

11



## காணாமலாக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதியே வேண்டும்!

### உறவுகள் நேற்றும் போர்

கிளிநொச்சி, ஜூலை 31

காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில், சர்வதேச நீதியே தேவை என்று வலியுறுத்தி நேற்றுப் போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க அலுவலகத்துக்கு முன்பாக, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'எமது பிள்ளைகளுக்கு சர்வதேச நீதியே தேவை', 'இராணுவத்தின் கைகளில் ஒப்படைக்கப்பட்ட எமது பிள்ளைகள் எங்கே?' போன்ற கோஷங்களை எழுப்பியவாறும், காணாமலாக்கப்பட்ட தமது பிள்ளைகளின் படங்களைத் தாங்கியவாறும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ-ம-25-113)

## நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்!

### ரி.ஐ.டி. விசாரணையின் பின்னர் அமலநாயகி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 31

எமது உறவுகளுக்கான நீதி கிடைக்கும்வரை, மீளவும் கடத்தல் சம்பவங்கள் எமது இனத்துக்கு நடக்காது என்பதனை உறுதிப்படுத்தும் வரை எமது போராட்டம் தொடரும் என பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைக்குப் பின்னர் அமலநாயகி அமல்ராஜ் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி அமலநாயகி அமலராஜை,

11

## 10 ஒப்பந்தங்களுடன் இலங்கையில் மோடி!

### தோற்கடிப்போமென விமல் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 31

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளார் எனவும், இதன்போது 10 புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன என்றும் தகவல் கிடைத்துள்ளது. இந்த முயற்சியைத் தோற்கடிப்பதற்கு அனைவரும் அணிதிரள வேண்டும் என்று தேசிய

11

மாணவனின்

## புத்தகப் பைக்குள் கஞ்சா; தாய் பொலிஸால் கைது!

### தந்தை தப்பியோட்டம்

முல்லைத்தீவு, ஜூலை 31

முல்லைத்தீவு - கள்ளப்பாடு பகுதியைச் சேர்ந்த மாணவன் ஒருவரின் புத்தகப் பைக்குள் இருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ள நிலையில், அந்த மாணவனின் தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த மாணவன் வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்லும்போது புத்தகப் பையில் கஞ்சா

11

முல்லைத்தீவில் தீ

## மூன்று கடைகள் எரிந்து அழிந்தன

### தீயணைப்புப் பிரிவு வேண்டுமென மக்கள் வலுவான கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 31

முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் அமைந்துள்ள பிரதேச சபையின் பொதுச்சந்தைக் கட்டடத்தில் நேற்றுக் காலை ஏற்பட்ட தீ விபத்தால், மூன்று கடைகள் எரிந்தழிந்துள்ளன. இரண்டு கடைகள் மற்றும் ஒரு களஞ்சியம் என்பனவே இவ்வாறு தீயில் எரிந்தழிந்துள்ளன. தீ பரவுவதை அவதானித்த பொதுமக்கள் முல்லைத்தீவு பிரதேச

11

## சிறுமி துஷ்பிரயோகம் இளைஞர் கைதானார்!

முல்லைத்தீவு, ஜூலை 31

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம்

11

## ரூ. 20 லட்சத்துடன் சென்றவர் குளத்தில் சடலமாக மீட்பு!



### பணம் மாயம்: பொலிஸார் விசாரணை

யாழ்ப்பாணம், ஜூலை 31

முல்லைத்தீவு - வவுனிக் குளத்திலிருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுக்குச் செல்வதற்காக 20 இலட்சத்துடன் சென்றவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

ஆனந்தராசா சஜீவன் (வயது-27) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தித் திட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்போம்

## தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு பதிலளித்த ஜனாதிபதி செயலகம்

**கொழும்பு, ஜூலை 31**

**தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அபிவிருத்தித் திட்டங்களையும், நலன்புரித் திட்டங்களையும் இடைநிறுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்த பணிப்புரைக்கு ஜனாதிபதி செயலகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.**

தேர்தல்கள் ஆணையாளர் ரத்நாயக்கா ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பிய கடிதத்தில், தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அபிவிருத்தித் திட்டங்களையும், நலன்புரித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவது தேர்தல் விதிமீறல் எனக் குறிப்பிட்டு அவற்றை இடைநிறுத்துமாறும் குறிப்பிட்டிருந்தார். இந்தக் கடிதத்துக்குப் பதிலளித்துள்ள ஜனாதிபதியின் செயலர் சமன் ஏக்கநாயக்கா, சர்வதேச நாணயநிதியத்தின் திட்டங்களே இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்கள் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதற்கானவை. இவற்றை நிறுத்தினால் நலிவுற்ற மக்கள் மேலும் பாதிக்கப்படுவர். எனவே அவற்றை இடை நிறுத்தமுடியாது, என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ-6)

# மொட்டு ஆதரவின்றியும் ரணிலே வெல்வார்!

## மனுஷ நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 31

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஆதரவு இல்லாவிட்டாலும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே வெற்றிபெறுவார் என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மொட்டுக் கட்சியில் உள்ளவர்களில் 90 வீதமானோர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவு. நாடு பற்றிச் சிந்தித்து ஜனாதிபதி தீர்மானங்களை எடுத்தாரேதவிர, மொட்டுக் கட்சியைத் திருப்திப்படுத்த முடிவுளை எடுக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சி ஆதரவு வழங்காவிட்டாலும் ரணில் விக்கிரமசிங்கவே வெற்றிபெறுவார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# பெரமுன தளபதிகள் ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, ஜூலை 31

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் மூத்த அரசியல் தளபதிகளாகக் கருதப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம். சந்திரசேன, பந்துல குணவர்த்தன, ஜனக பண்டார தென்னக்கோன், எஸ்.பி.திஸாநாயக்க ஆகியோர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

கட்சி சார்பில் பொதுஜன பெரமுனக் கட்சி வேட்பாளர் ஒருவரை நியமிக்க தீர்மானித்துள்ள நிலையிலேயே அவர்கள் போர்க்கொடி தூக்கி, ரணில் சார்பு நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியில் இருந்தபடியே ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கப்படும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-44)

# இணைவோருக்கு ரணில் வரவேற்பு



கொழும்பு, ஜூலை 31

தன்னுடன் இணைந்துகொள்ள விரும்பும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தான் வரவேற்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களை இலக்கு வைத்தே ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார். ஆரம்பம் முதலே தன்னுடன் இணைந்து பயணித்தவர்களுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி தற்போது இணைந்துள்ளவர்களைப் பார்த்து நீங்கள் நாட்டின் முன்னேற்றத்தை உணர்ந்து, மாற்றத்தின் ஒரு பகுதியாக இருக்க விரும்புகிறீர்கள். நமது நாட்டின் எதிர்காலத்துக்கான உங்கள் அர்ப்பணிப்பு, தைரியம் என்பவற்றுக்கு நன்றி என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ச-6)

# தேர்தல் திகதியில் மாற்றமில்லை

## ஜனாதிபதி உறுதி

கொழும்பு, ஜூலை 31

ஜனாதிபதித் தேர்தலை செப்ரெம்பர் 21ஆம் திகதிக்கு அப்பால் வேறொரு தினத்தில் நடத்த தாம் தயாராக இல்லை. குறித்த திகதியில் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் இடம்பெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் என்பது மக்களின் இறையாண்மையின் ஓர் அங்கம். அதனை மீற இடமளிக்கமுடியாது. நாட்டில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# போரா? அபிவிருத்தியா?

## ஐ.தே.க. கேள்வி

கொழும்பு, ஜூலை 31


செப்ரெம்பர் 21ஆம் திகதி மீண்டும் ஒரு உள்நாட்டு போருக்கு அடித்தளமிடப்போகிறீர்களா? அல்லது நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்லப் போகிறீர்களா? என்பதை மக்கள் தீர்மானிக்கவேண்டும் - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை பல கிளர்ச்சியாளர்களையும் உள்நாட்டு போர்களையும் சந்தித்துள்ளது.

செப்ரெம்பர் 21ஆம் திகதி மீண்டும் ஒரு உள்நாட்டு போருக்கு அடித்தளமிடப்போகிறீர்களா? அல்லது நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்லப் போகிறீர்களா? என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குங்கள்- என்றார். (ஒ-6)

# எவ்வளவும் வழங்குவோம்



கொழும்பு, ஜூலை 31

ஜனாதிபதித் தேர்தலில் முன்னிலையாகும் வேட்பாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து தேர்தலுக்கான செலவுகள் அதிகரித்தாலும் அந்தத் தொகையை வழங்க திறைசேரி தயாராக உள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அறிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம் சுமார் 08 பில்லியன் ரூபா அண்ணளவான மதிப்பீட்டை திறைசேரிக்கு அனுப்பிவைத்துள்ளது. வேறு செலவுகள் மதிப்பிடப்பட்ட தொகைக்கு மேலதிகமாகஅதிகரித்தாலும், நிச்சயமற்ற செயற்பாடுகளுக்கு ஏற்ப தற்போது பணம் கையிருப்பில் உள்ளது. இதனால் மேலதிக செலவுகள் தொடர்பில் பிரச்சினை ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# ரணில் துரோகம் பஸில் ஆதங்கம்

கொழும்பு, ஜூலை 31

ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நிலையில் அவர் சுயாதீன வேட்பாளராக போட்டியிடுவதாக அறிவித்துள்ளமை தவறானது என்று பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

மொட்டுச் சின்னத்தில் பெரமுனவின் உறுப்பினரை களமிறக்க ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு எவ்வித நிபந்தனைகளுமின்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கினோம். ஆனால் கடந்த 2 ஆண்டுகாலமாக அவர் பொதுஜன பெரமுனவின் கட்சிக்கு முன்னுரிமை வழங்கவில்லை. பொதுஜன பெரமுனவை பலவீனப்படுத்தவே முயற்சிக்கிறார். இதற்கு இடமளிக்கமுடியாது.

கட்சி என்ற ரீதியில் முழுமையாக விட்டுக்கொடுத்து செயற்படமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# முடிவை பரிசீலிக்குமாறு அழுத்தம்

கொழும்பு, ஜூலை 31

கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவரை களமிறக்கும் முடிவை கட்சி மீள்பரிசீலனை செய்யவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் கட்சி படுதோல்வி அடையும் என்று பொதுஜன பெரமுனக் கட்சி எம்.பி.க்கள் பலராலும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

பெரமுனக் கட்சியின் 50 க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்காவிடின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவார்.

ஆகவே கட்சியின் பெரும்பான்மை நிலைப்பாட்டுக்கு மதிப்பளித்து சிறந்த தீர்மானம் எடுக்கவேண்டும். ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கான முடிவை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவேட்பாளர் தெரிவு; தமிழருக்கு செல்லாக்காசு

## கூறுகிறது இந்து சமயப் பேரவை

**யாழ்ப்பாணம், ஜூலை 31**

**வரவிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவது தமிழரின் வாக்குப்பிரயோகத்தைச் செல்லாக்காசாக்கும் புத்திக்கூர்மையற்ற கபட நோக்கமாகும். இந்த முயற்சியில் ஈடுபடுவோர் ஆக்கபூர்வமாகச் சிந்திக்கவேண்டும்.**

-இவ்வாறு இந்து சமயப் பேரவையின் தலைவர் சிவசக்தி கிரீவன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்ப்பொதுவேட்பாளரை நிறுத்துவது அந்தரங்க சுத்தியற்ற தமிழர் வாழ்வை அழிவுப்பாதைக்கு அழைத்துச் செல்லும் அரசியல் நாகரீகமற்ற முயற்சியாகும்.

இந்தமுயற்சியில் ஈடுபடுவோருக்கு தமிழர் ஒருபோதும் ஜனாதிபதியாகமுடியாது என்பது நன்கு தெரியும். அப்படித்தான் தட்டித்தவறி ஜனாதிபதியானாலும் ஒருகணம் கூட ஆட்சியைத் தக்கவைக்கமுடியாது. இங்கு ஜனநாயகம் பூத்துக்குலுங்கவில்லை என்பது உண்மையே.

எனவே வெற்றிபெறக்கூடிய சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களைச் சந்தித்து அன்பாகச் பேசுங்கள். அவர்களில் எவர் எமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறார் என்பதை இனங்கண்டு அவரோடு ஒப்பந்தமொன்றை நிறைவேற்றுங்கள். அதனூடாகவே தமிழர் உரிமைகளை வென்றெடுக்கலாம்- என்றுள்ளது. (ச)

# கைபேசி செயலியில் இனி 'லைசென்ஸ்'

இலங்கையில் தற்போது பாவனையில் உள்ள சாரதி அனுமதிப்பத்திரத்தை இலத்திரனியல் முறைமைக்கு மாற்றத் திட்டமிட்டுள்ளதாக சாரதி அனுமதி பத்திரம் அச்சிடும் பிரிவின் பிரதி ஆணையாளர் சுரங்கி பெரேரா தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலங்களில் சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பத்தை விண்ணப்பிக்க தேவையில்லை. இருந்த இடத்தில் இருந்தவாறே பத்திரத்தை புதுப்பித்தல், காணாமல் போன சாரதி அனுமதிப்பத்திரத்தை மீளப் பெற்றுக்கொள்ளல் போன்ற செயற்பாடுகளை இலத்திரனியல் முறையில் முன்னெடுக்கலாம். தங்களின் ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியில் இந்தச் சாரதி அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்திக்கொள்ளமுடியும்.

இதற்காகவே பிரத்தியேகமான செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# இளம் மீனவர்கள் கூட்டு வடக்கு – கிழக்கில் உதயம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

வடக்கு- கிழக்கு இளம் மீனவர் கூட்டு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள வவுனியா மாவட்டத்தை தவிர ஏனைய அம்பாறை , திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய ஏழு மாவட்டங்களை உள்ளடக்கி இந்த இளம் மீனவர் கூட்டு உருவாக்கப்பட்டுள்ளது. அங்குரார்ப்பண நிகழ்வு யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ச-60-56)

# வாக்காளர் அட்டை முதற்கட்டப் பணிகள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகப் பணிகளுக்கான முதற்கட்டப் பணிகள்தற்போதுமுன்னெடுக்கப்படுவதாகப் பிரதி அஞ்சல்மா அதிபர் ராஜித் கே. ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக சுமார் 8 ஆயிரம் சேவையாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அத்தோடு, உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கான விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதேவேளை ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் திகதி எதிர்வரும் ஐந்தாம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)




# இளம் ஆளுமை விருது மன்னாரில் இருவருக்கு

சிறந்த சமூகச் செயற்பாடு மற்றும் கலை ஆர்வம் போன்றவற்றில் தொடர்ச்சியாக செயலாற்றி வந்தமைக்காக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இருவருக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. வவுனியா சுத்தானந்தா கலை கலாசார அரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் மன்னாரைச் சேர்ந்த செ. டிலக்சனுக்கு சிறந்த சமூக ஆர்வ குறும்பட இயக்குநருக்கான விருதும் பேசாலையைச் சேர்ந்த மார்கஸ் டிவைன்சி இளம் முயற்சியாளர் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ச-25, 213)

# மடு ஆவணிப் பெருவிழா முன்னாயத்தம்

மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 ஆம் திகதி விசேட திருவிழாவாக இடம்பெறவுள்ளது.



இந்தநிலையில் அது தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில், மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை ஞானப்பிரகாசம், இராணுவம், பொலிஸ், கடற்படை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், மதகுருமார்கள் கலந்துகொண்டனர். (ச-25, 56)

# புதினம் தெரியுமோ?

அரசாங்க ஆஸ்பத்திரியளில வேலை செய்யிற டாக்குத்தர்மாரை வேணுமெண்டே சிலர் பிழையாக் காட்ட நினைக்கினம் எண்டு நேற்றுப் பட்சி சொன்னதெல்லோ. அதைப்பற்றி இண்டைக்கு பாப்பம். டாக்குத்தர் அர்ச்சுனா, மருத்துவ மாபியாக்களுக்கு எதிராப் போராடுறன் எண்டிட்டு, முறைப்பாடு சொன்னதெல்லாம் அரசாங்க ஆஸ்பத்திரியளையும், அங்க வேலை செய்யிற டாக்குத்தர்மாரையும் தான். ஆனால் அரசாங்க ஆஸ்பத்திரியளில இருக்கிற மருத்துவ மாபியாக்கள் நெத்தலி மீன் எண்டால், பிரைவேட் ஆஸ்பத்திரியளில இருக்கிறது மாபியாத் திமிங்கிலங்கள். ஆனால் அப்பிடிப்பட்ட மாபியாத் திமிங்கிலங்களைப் பற்றி வாயே திறக்காமல், அப்பாவி நெத்தலியளைப் போட்டுத்தாக்கித்தான் டாக்குத்தர் அர்ச்சுனா பேமஸானவர். இப்ப அவர் அந்த மருத்துவமாபியாக்களையே மறந்துபோய், வெருளிக்கூத்து ஆடிக்கொண்டிருக்கிறார் எண்டது வேற விசயம்.

ஆனாலும் அர்ச்சுனா விசயத்தை இப்பிடி பேஸ்புக், யூரியூப் எண்டு சமூக வலைத்தளங்களில பெரிசாக்கினதுக்குப் பின்னால, பிரவேட் ஆஸ்பத்திரியள் இருக்கெண்டும் கதை அடிபடுகுது. ஆஸ்பத்திரியில வேலை செய்யிற டாக்குத்தர்மாரெல்லாம் மாபியாக்கள், அவையள் பணத்தாசை பிடிச்சவை, ஒழுங்கா வேலை செய்ய மாட்டினம், பிழையான ட்ரீட்மெண்ட்தான் குடுப்பினம், அவைக்கு மனிசரின்ர உயிரைப் பற்றி அக்கறையில்லை எண்டெல்லாம் சனத்தின்ர மனதில பதியவைச்சால், என்ன நடக்கும்? சனங்கள் அரசாங்க ஆஸ்பத்திரிக்குப் போனால், தங்கட வருத்தம் மாறாது எண்ட நினைப்பில பிரைவேட் ஆஸ்பத்திரியளுக்குத்தான் போக வெளிக்கிடும். அரசாங்க ஆஸ்பத்திரி இல்லாத இடங்களுக்கு உப்பிடியான பிரைவேட் ஆஸ்பத்திரியள் அவசரத்துக்கு உயிர்காக்கத் தேவைதான். ஆனால், அரசாங்க ஆஸ்பத்திரியள் இருக்கிற இடத்துக்குக் கிட்டவாத்தான் எல்லாப் பிரைவேட் ஆஸ்பத்திரியளும் இருக்குது.

அதைவிட, பிரைவேட் ஆஸ்பத்திரியளைவிடவும், அரசாங்க ஆஸ்பத்திரியளில எல்லா நவீன சாதனங்கள் இருந்தும், நல்ல டாக்குத்தர்மார் இருந்தும் சனங்கள் பிரைவேட் ஆஸ்பத்திரிக்கு போறதுக்கு காரணம், அங்க போனால் வேளைக்கு போன அலுவலை முடிக்கலாம் எண்டுதான். ஆனால் இப்ப யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில ஒராள் வருத்தமெண்டு போனால், அவரை வார்ட்டில நிப்பாட்ட வேண்டிய தேவை இல்லாட்டி, அரை மணித்தியாலத்திலேயே எல்லா ட்ரீட்மெண்டும் செய்து மருந்தும் குடுத்து அனுப்பி விடுகினம். அதால செலவும் குறைவு, நேரமும் மிச்சம்.

இப்பிடியான விசயங்களால சனங்கள் இப்ப பிரைவேட் ஆஸ்பத்திரியளை விட்டிட்டு , அரசாங்க ஆஸ்பத்திரிப்பக்கம் போக வெளிக்கிட்டுட்டுதுகள். அதைக் குழப்பி, பழையபடி பிரைவேட் ஆஸ்பத்திரியளுக்கு சனங்கள், நல்லூர்த்திருவிழா மாதிரி கூட்டம் கூட்டமா வரோணுமெண்டதுக்காகத்தான் , இப்பிடி பிளான் பண்ணி, அர்ச்சுனாவைத் தூக்கிப் பிடிச்சுக் கதைச்சவையாம். அர்ச்சுனாவும் தான் கள்ளடிச்ச கதையெல்லாம் உளறிக்கொட்டினாலும், தப்பித்தவறிக்கூட பிரைவேட் ஆஸ்பத்திரியளைப் பற்றியோ, அங்க நடக்கிற கூத்துகளைப் பற்றியோ ஒண்டுமே சொல்லேலையே. என்னதான் அர்ச்சுனா செய்த கலவரத்தால கொஞ்ச நன்மையள் ஆஸ்பத்திரிக்குப் போற சனத்துக்கு கிடைச்சிருந்தாலும், இன்னொரு வளமா அவர் சனங்களை பிரைவேட் ஆஸ்பத்திரியளுக்கு போகவைக்கிற புறோக்கராவும் இருந்திருக்கிறார். இன்னும் கொஞ்ச நாளைக்கு உந்த ஆஸ்பத்திரியளைப் பற்றித்தான் பட்சி சொல்லும். அந்தளவுக்கு நிறையச் சொல்லக்கிடக்குது கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்லூர்ப் பெருந்திருவிழா

# பந்தல்கால் நடுகையும் காளாஞ்சி வழங்கலும்

யாழ்ப்பாணம், ஜூலை 31

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவப் பெருந் திருவிழாவுக்கான பந்தல்கால் நடும் நிகழ்வும் பாரம்பரியமாகக் கொடிச் சீலை வழங்குபவர்களுக்கான காளாஞ்சி வழங்கும் நிகழ்வும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றன.

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் வள்ளியம்மைத் திருக்கல்யாணப் படிப்புடன் பந்தல் கால் நாட்டல் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பாரம்பரிய முறைப்படி ஒற்றைத் திருக்கை மாட்டுவண்டியில் கொடிச் சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சியும், பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு கந்தன் தொண்டர்கள், அடியவர்கள் புடைசூழ ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டுக் கையளிக்கப்பட்டன.

அதேவேளை, நல்லூர்க் கந்தன் பெருந் திருவிழா அடுத்த மாதம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-66,20)

## சிறுவர் சந்தை

யாழ்ப்பாணம், ஜூலை 31

இணுவில் பொதுநூலக சிறுவர் திறன் விருத்தி மையச் சிறார்களின் மாபெரும் சிறுவர் சந்தை நிகழ்வு இன்று புதன்கிழமை காலை8.30 மணியளவில் சிறுவர் திறன் விருத்தி மையத்தில் இணுவில் பொதுநூலகத் தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச-66)

## செம்பருத்தி இதழுக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 31

வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையின் வெளியீடாகிய 'செம்பருத்தி இதழ் - 2'க்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்களை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பதாக பிரதேச செயலகத்தில் நேரடியாகவோ அல்லது DSofficeppd@grnail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாகவோ ஒப்படைக்கமுடியும்.

மேலதிக தகவல்களுக்கு 0212260215 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (ச-25)



## யாழ். பல்கலைக்கழகத்தில் விக்ரமபாகுவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம் , ஜூலை 31

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் தமிழ்மக்களின் தன்னாட்சி உரிமையை அங்கீகரித்துத் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்த மறைந்த சிங்களத் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்னவுக்கு கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பொதுநினைவுத் தூபியடியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் கறுப்பு ஜூலையின் 41 ஆவது ஆண்டு இனப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வும் அனுஷ்டிக்கப்பட்டது. (ச-22,66)

## மாற்றுத்திறனாளர் இசைப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 31

சாவிகா சங்கீத அறிவாலயமும், புதிய வாழ்வு நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்த வடக்கின் மாற்றுத்திறனாளிகளுக்கான இசைப்போட்டி சாவிகா சங்கீத அறிவாலய உப தலைவர் பா.கஜந்தினி தலைமையில் யாழ். மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன், ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை அதிபர் யோ. ஜெகானந்தம், புதிய வாழ்வு நிறுவன இயக்குநர் து.திலகவதி ஆகியோர்விருந்தினர்களாகவும்,பிரபல இசைக்கலைஞர்களான திருமதி ர.வாசஸ்பதி , திருமதி ந. விக்கினேஸ்வரி, ப.நவரட்ணம் , சு. ரஜீந்திரன் , இ.நிரோஜன் ஆகியோர் நடுவர்களாகவும் கலந்துகொண்டனர். (ச-5,27,100,66)







## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இளைய சகோதரர்கள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** புதிய உற்சாகம் பிறக்கும். சாதிக்க வேண்டும் என்ற துடிப்புடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகளில் நன்றாக சிந்தித்து செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**கடகம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். பணம் வந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்படும்.

**சிம்மம்:** வழக்கமான பணிகளிலும் சிந்தித்து செயற்படவேண்டிய நாள். வீண் செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். துர்கையை வழிபடுவது நலம் சேர்க்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சு சாதகமாக முடியும்.

**துலாம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் முடிவு எடுப்பதில் அவசரம் வேண்டாம். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. லட்சுமி நரசிம்மர் வழிபாடு நன்று. மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகம் :** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். சிலருக்கு பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இளைய சகோதரர்கள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியம் மேம்படும். உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியே உண்டாகும். காரியங்கள் இழுபறியாகும். அதிகாரிகள் கண்டிப்பாக நடந்துகொள்வார்கள்.

**கும்பம்:** அனைத்து விஷயங்களிலும் அவசர முடிவுகளைத் தவிர்த்துப் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறை முகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும்.

**மீனம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள் . தந்தைவழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். வீண் செலவுகள் ஏற்படக்கூடும் வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேர்தல் பரீட்சைகள்

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் களம் சூடு பிடிக்க ஆரம்பித்திருக்கின்றது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயேச்சையாகக் களமிறங்கவிருக்கும் நிலையில், ராஜபக்சக்களின் மொட்டுக் கட்சியும் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கவிருக்கின்றது. மொட்டுக் கட்சியின் செல்வாக்குச் சரிந்திருக்கும் நிலையில், தேர்தலில் ரணில், சஜித், அநுர என்ற மும்முனைப் போட்டியே இருக்கும் என்றே தெரிகின்றது. முன்னைய எந்தத் தேர்தலிலும் இல்லாத நெருக்கடியை இப்போது ராஜபக்சக்கள் எதிர்கொண்டுள்ளனர். கடும் விமர்சனங்களைச் சந்தித்துள்ள ராஜபக்சக்களின் அரசியல் இனி மக்கள் மத்தியில் எடுபடுமா என்பது கேள்விக் குறியே. மொட்டுக் கட்சி பிளவுபட்டு ஒரு தரப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரளிப்பதால் மொட்டுக்கட்சியின் குறிப்பிட்ட அளவு வாக்குகளை ரணில் அள்ளக்கூடும். இந்தத் தேர்தலில் சஜித் தரப்போ அல்லது அநுர தரப்போ வென்றால் யானைக் கட்சிக்கோ, மொட்டுக் கட்சிக்கோ மீட்சி கிட்டாது என்பதால் ரணில் தரப்புக்கும், ராஜபக்ச தரப்புக்கும் இந்தத் தேர்தல் ஒரு விஷப்பரீட்சை என்றே கூறவேண்டும்.

பொருளாதார நெருக்கடியின் தொடர்ச்சியாக ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி ராஜபக்சக்களின் கைகளில் இருந்த அதிகாரத்தை வலிக்காமல் எடுத்துக்கொண்ட ரணில் விக்கிரமசிங்க இழந்திருந்த மக்கள் செல்வாக்கை ஓரளவுக்குக் கட்டியெழுப்பியிருக்கின்றார். நலிந்து படுத்திருந்த இலங்கைப் பொருளாதாரத்தையும் கூடவே யானைக் கட்சியையும் மெல்லத் தட்டியெழுப்பியது மட்டுமல்லாது, ராஜபக்சக்களின் பக்கமிருந்தும் தனக்கு ஆதரவைத் தேடி வைத்திருக்கின்றார். ஜனாதிபதித் தேர்தலுக்கு அப்பால், பொதுத் தேர்தலை இலக்குவைத்தே அனைத்துக் கட்சிகளும் காய்களை நகர்த்துகின்றன. பதவியில் இருக்கும் ரணில் அனைத்து வளங்களையும் பயன்படுத்தி இம்முறை அதிகாரத்தைக் கைப்பற்றவே பார்ப்பார்.

அரசியல் தந்திரங்களில் நரி என்று அழைக்கப்படும் ரணில் விக்கிரமசிங்க, தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட மறுநாளே கட்டுப்பணத்தைச் செலுத்தி சுயேச்சையாகப் போட்டியிடப் போவதாக அறிவித்திருந்ததும், ராஜபக்சக்களை வழிக்குக் கொண்டு வருவதற்கான ஒரு தந்திரம் என்றே பேசப்படுகின்றது. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்தால் மொட்டுக் கட்சி உதிர்ந்து சிதறிவிடும் என்ற அச்சம் ராஜபக்சக்களிடம் இருப்பதால் அவர்கள் மெல்லவும் முடியாது, விழுங்கவும் முடியாத நிலைமையில் தற்போது தனிவழி செல்லும் திட்டத்தைக் கையிலெடுத்துள்ளனர் என்றே தெரிகின்றது. ராஜபக்சக்களின் இந்த முடிவால் அவர்களுக்கு சாதகமான மாற்றங்கள் கிடைக்கும் வாய்ப்புகள் குறைவே. ஆனால் ராஜபக்ச என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டைப் பொய்யாக்கி, வாக்கு வேட்டையை நடத்தும் வாய்ப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டிருக்கின்றது. தெற்கு அரசியலில் ஏற்பட்டிருக்கும் இந்த மாற்றங்கள், நாட்டு மக்கள் மத்தியில் அநுர தரப்புக்கும், சஜித் தரப்புக்கும் ஏற்பட்டிருக்கும் ஆதரவு அலையின் வீரியத்தைக் குறைப்பதற்கான நாடகங்களாகவும் இருக்கலாம். அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை, நிரந்தர நண்பனும் இல்லை என்பதற்கிணங்க எதிர்வரும் நாள்களில் அரசியலில் திடீர் திருப்பங்களும் ஏற்படக்கூடும். ஆனால் இம்முறைத் தேர்தல்களம் இதுவரை இல்லாத அளவுக்கு பரபரப்பும், பதற்றமும், போட்டியும் நிறைந்ததாக இருக்கும் என்று நம்பலாம்.



# வேட்பாளர் அதிகரித்தால் வாக்குச்சீட்டும் வீங்கும்!

அரச அச்சகம் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 31**

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை கடந்த 2019 தேர்தலை விட அதிகரித்தால் வாக்குச்சீட்டின் நீளத்தை அதிகரிக்க முடியாது. ஆனால் 'சி.ஆர்.' பயிற்சிப் புத்தகத்தின் பக்கத்தைப் போன்று அச்சிட வேண்டியிருக்கும் என அரச அச்சகம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அச்சகர் கங்கானி கல்பனா லியனகே தெரிவிக்கையில்,

கடந்த 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலில் 35 வேட்பாளர்கள் முன்னிலையாகி இருந்ததால் 26 அங்குல நீளமான வாக்குச் சீட்டு அச்சிட வேண்டிய நிலை ஏற்பட்டது. வாக்குச் சீட்டு அச்சிடக்கூடிய அதிகபட்ச நீளம் 26 அங்குலமே. அதற்கு மேல் அச்சிட முடியாது. அச்சிடுவதற்காக அதே அளவு காகிதம் முன்பதிவு செய்யப்பட்டுள்ளது. -இவ்வாறு வாக்குச்சீட்டு பெரிதாக்கப்படுவதால் வாக்குப்பெட்டியில் போடக்கூடிய தாள்களின் எண்ணிக்கையும் குறையும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

பயிர்ச்செய்கை ஏற்றுமதி

## கடந்த மாதங்களில் 1118.06 மில்.டொலர்

வவுனியா, ஜூலை 31

தேயிலை, இறப்பர், தென்னை, இலவங்கப்பட்டை மற்றும் மிளகு ஆகிய ஐந்து தோட்டப் பயிர்களின் ஏற்றுமதியின் காரணமாக 2024 ஜனவரி முதல் ஏப்ரல் வரை நாட்டின் ஏற்றுமதி வருமானம் 1118.06 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் ஏற்றுமதி வருமானத்தை விட 234 மில்லியன் டொலர் இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் ஈட்டப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## தேயிலை உரமானியம் இரட்டிப்பு

கொழும்பு, ஜூலை 31

தேயிலைத் தோட்டங்களுக்கு உரமிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்த மானியத் தொகையான 2000 ரூபாவை 4000 ரூபாவாக அதிகரிக்க விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் பருவத்தில் இருந்து இந்த உரத்துக்கு மானியம் வழங்கப்படவுள்ளது.

தேயிலை உரத்தின் விலையை மேலும் 2000 ரூபாவால் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)



## மீண்டும் முட்டை இறக்குமதி

உள்நாட்டுச் சந்தையில் முட்டையின் விலையை ஸ்திரப்படுத்தும் வகையில் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. எதிர்வரும் ரமலான் மற்றும் கிறிஸ்மஸ் பண்டிகைக் காலங்களில் சந்தையில் முட்டை விலையை ஸ்திரப்படுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கல்வியியற் கல்லூரி கொடுப்பனவு உயர்வு

கொழும்பு, ஜூலை 31

தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கான கொடுப்பனவை அடுத்த மாதம் முதல் 8000 ரூபாவாக அதிகரிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது இரண்டாமாண்டு படிக்கும் மாணவர்களுக்கு அதிகரிக்கப்பட்ட உதவித்தொகை ஓகஸ்ட் மாதம் முதல் வழங்கப்படும். புதிய மாணவர்களுக்கான உதவித்தொகை செப்ரெம்பர் மாதம் முதல் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முன்பதாக தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## நாளை

01.08.2024

**வியாழக்கிழமை - ஆடி - 16**

பிரதோஷ விரதம்

சுபநேரம் : 07.33 - 09.03

ராகுகாலம் : 01.33 - 03.03

## நாளொரு நல்வார்த்தை

**நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.**

*-ஜோன்மில்டன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்கள் ஒத்துழைக்காமல் குற்றங்களைக் கட்டுப்படுத்த முடியாது

*யாழ். பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார தெரிவிப்பு*



**யாழ்ப்பாணம், ஜூலை 31**

**பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கு இடையில் நட்புறவு இல்லை. அதேபோல் நிறுவனங்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலும் அன்னியோன்னியம் இல்லை. பொதுமக்கள் பொலிஸார் இடையில் நட்புறவு காணப்படும் பொழுது குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தமுடியும்.**

பொலிஸ் நிலையத்தில் ஆயிரம் பொலிஸார் கடமையாற்றினாலும் பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றிக் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தமுடியாது - இவ்வாறு யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற சிநேகபூர்வமான ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நான் கடந்த பல வருடங்களாக கிழக்கு மாகாணம், தென்பகுதியில் கடமையாற்றினேன். எனது பணியின் இறுதிக்காலம் யாழ். மாவட்ட மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இங்கு வந்துள்ளேன்.

யாழ்ப்பாண மக்கள் மிகவும் பண்பானவர்கள். அவர்கள் போரால் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களின் வலி எனக்குப் புரியும். அவர்களுக்கு சிறந்த சேவையை வழங்கவேண்டும்.

சகல பொலிஸ் நிலையங்களிலும் பொதுமக்கள் பொலிஸை உருவாக்கவேண்டும் என்று செயற்படுகிறேன். கடந்த காலங்களில் சிவில் சமூக பாதுகாப்புக் குழுவில், சமூகத்தில் பெரியவர்களும் ஓய்வு பெற்றவர்களுமே உள்வாங்கப்பட்டிருந்தனர். அதனை விடுத்து இளைஞர் யுவதிகளை அதிகளவில் உள்வாங்கவேண்டும். பொலிஸார் தவறு செய்தால் எனக்கு நேரடியாக தெரிவிக்க முடியும். பொலிஸ் நிலையங்களிலும், ஏனைய திணைக்களங்களிலும் தமது கடமைகளைச் சரிவரச் செய்யாதோர் உள்ளனர். பொலிஸ் நிலையங்களில் அவ்வாறு உள்ளவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஒ-23)

## கலாபூஷணம் விருது விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 31

கலாசாரத் திணைக்களத்தினால் இவ்வருடத்துக்குரிய கலாபூஷணம் விருதுக்கு 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களைத் தத்தமது பிரதேச கலாசார அலகில் பெற்று, உரிய ஆவணங்களின் பிரதிகளுடன் நாளைமறுதினம் 2 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தென்மராட்சிப் பிரதேச தகைமையுள்ள விண்ணப்பிக்க விரும்பும் கலைஞர்கள் பிரதேச செயலக மண்டபத்தில் கலாசார அலகில் படிவத்தினைப் பெற்று ஆவணங்களின் பிரதிகளுடன் சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

## அழைப்பிதழ் கையளிப்பும் கௌரவிப்பும்



யாழ்ப்பாணம், ஜூலை 31

சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ அழைப்பிதழ் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் மற்றும் சமூகமாணி கலாநிதி பா. தனபாலன் ஆகியோரிடம் ஆலய நிர்வாகத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

அதனை அடுத்து , சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஆலய நிர்வாகத்தினரால் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ஒ-25)

## தெளிவூட்டல் கருத்தரங்கு பிற்போடல்

யாழ்ப்பாணம், ஜூலை 31

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சும் கோப்பாய்ப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தவிருந்த பாதுகாப்பான தொழிலாளர் புலம்பெயர்வும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சேவைகள் தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கு இன்று புதன்கிழமை கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகக் கோப்பாய்ப் பிரதேச செயலக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-66)

## மலையக எழுச்சிப் பயணத்தின் ஓராண்டு நினைவேந்தல் நிகழ்வு



மன்னார், ஜூலை 31

மாண்புமிகு மலையக எழுச்சிப் பயணத்தின் ஓராண்டு நினைவேந்தல் நிகழ்வு, தலைமன்னார் ஊர்மனைக் கிராமத்தில் புனித லோரன்சியார் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

மலையக மக்கள் மற்றும் தலைமன்னார் ஊர்மனைக் கிராம மக்கள் ஊர்வலமாகச் சென்று குறித்த கிராமத்தின் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள மலையக மக்களின் ஞாபகார்த்த நினைவுத் தூபிக்கு விளக்கேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (ப-56)

## பொதுக்கூட்டம்



'மலரும் மூளாய் அபிவிருத்தி அமையம்' எனும் சமூகசேவை அமைப்பின் பொதுக்கூட்டம், மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலயத்தின் அரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

இதன்போது, அமைப்பின் யாப்பு வாசிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டதுடன் அமையத்துக்கான இலச்சினையும் வெளியிடப்பட்டது. மேலும் கடந்த வருடம் க.பொ.த. உயர் தர விஞ்ஞானப் பிரிவில் 3ஏ சித்திகளைப் பெற்று மூளாய் மண்ணுக்குப் பெருமை தேடித்தந்த யோ.ஜக்சஜன் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னமும் பொற்கிழியும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ப-125).

## மஹோற்சவம்!

யாழ்ப்பாணம் , ஜூலை 31

வியாபாரிமூலை, இன்பர்சிட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய குரோதி வருட மஹோற்சவம் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மகா கணபதி மாணிக்கவாசகக் குருக்கள் தலைமையில் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி காலை வேட்டைத் திருவிழாவும், மாலை சப்பரத் திருவிழாவும் மறுநாள் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ச-22,100)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 6 கிலோ ஐஸ் கைப்பற்றப்பட்டது

கொழும்பு, ஜூலை 31

இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 6 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளை இந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த 24ஆம் திகதி பைசல் ரஹ்மான் என்பவரை இராமநாதபுரம் பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து சென்னையைச் சேர்ந்த மன்சூரையும் இராமநாதபுரத்தைச் சேர்ந்த இப்ராஹிம்மையும் பொலிஸார் கைது செய்தனர்.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் ரெட்ஹில்ஸ் பகுதியிலுள்ள பாழடைந்த வீடொன்றிலிருந்து ஐஸை கைப்பற்றினர். (ஒ-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## போதைக்கு அடிமையான இளைஞர் உயிர்மாய்ப்பு!

*சுழிபுரத்தில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஜூலை 31
போதைப்பாவனைக்கு அடிமையான இளம் குடும்பத்தலைவர், தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை மேற்கு, சுழிபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
28 வயதுடைய மேற்படி நபர், போதைப் பாவனைக்கு அடிமையாகியிருந்த நிலையில், போதைப் பழக்கத்தைக் குடும்பத்தினர் தடுத்த போதே தனது உயிரை மாய்த்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.
சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.
இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.
(அ-ச-27-26)

## முதியவரொருவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 31
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி மேற்குப் பகுதியில் முதியவர் ஒருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.
முதியவரும் அவரது மனைவியும் வீட்டில் வசித்து வந்த நிலையில் அவரது மனைவி வெளியே சென்றிருந்தபோது முதியவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.
உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.
(அ-ச-27,66,20)


### காணி விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 13 பரப்பும் 5 குழியும் உள்ள காணியும், யாழ் Brown வீதியில் 7 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.


தொடர்பு: 077 723 2535

### நாகபூஷணி திருமண சேவை

**பதிவுக் கட்டணங்கள் யாவும் இலவசம்**
**எம்மிடம் மணமக்கள் ஜாதகங்கள் பல்லாயிரக் கணக்கில் உள்ளன. பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்**
10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
(Bcas கம்பஸ் இற்கு அருகில்)
**021 222 9306, 077 138 7596, 071 999 9306**


## மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 10 . 1935



மறைவு
28 . 07 . 2024

### அமரர் சதாசிவம் சுந்தரமூர்த்தி

பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் சுந்தரமூர்த்தி அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (28.01.2024) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-அன்னப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-பொன்னமா தம்பதியின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் தெய்வநாயகி, கைலாயபிள்ளை, மாணிக்கவாசகர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மாலினி காலஞ்சென்ற கமலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்நாதன், ஜனகன் ஆகியோரின் மாமனாரும் றொஷான், லக்ஷன், ரம்மியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


**பண்ணாகம்**
**சுழிபுரம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 029 3742**

(CS 1038) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 07 . 1931



மறைவு
30 . 07 . 2024

### சந்தியாப்பிள்ளை மரியதாஸ்

கனால் வீதி, மாதகலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை மரியதாஸ் நேற்று (30.07.2024) செவ்வாய்க்கிழமை விண்ணகப் பிறப்படைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - மதலேனம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆரோக்கியநாதர் - செபமாலைமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பிலோமினாவின் அன்புக் கணவரும், மரியஜெனிற்றா (செல்லமணி), தோமஸ்ராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்திநாதர், காலஞ்சென்ற மேரி ஜெஸ்லின் (றெஜி) ஆகியோரின் மாமனாரும், சுதன் - றோசலின், சுறீன் - மணிமொழி, அருட்பணி சுமன் (உப அதிபர், புனித கென்றியரசர் கல்லூரி, இளவாலை), சுதீன் - கிறிஸ்ரா, ரகித் - சுகிதா, றெஸ்ரீன் ஆகியோரின் அன்புப் பேரனும், மரிஷனன், கெஸ்ரன், றிஷானி, றியான், கின்சிகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.07.2024) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வீட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித தோமையார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 797 2820**
**077 664 7701**

**கனால் வீதி,**
**மாதகல்.**

(CS/55811) J-1

## நினைவலைகள்

### 31ஆம் ஆண்டு

மலர்வு
13 . 02 . 1929



உதிர்வு
20 . 12 . 1993

**இளையதம்பி கந்தசாமி**
(திதி: ஸப்தமி)

ஞானபண்டித பாடசாலை அருகில்
கொக்குவில் மேற்கு.

### 27ஆம் ஆண்டு

மலர்வு
19 . 11 . 1961



உதிர்வு
31 . 07 . 1997

**மைதிலி கந்தசாமி**
(திதி: ஏகாதசி)

உங்களோடு வாழ்ந்த இனிமையான நாட்களை மறக்க முடியவில்லை
இன்று அதை மீட்டிப் பார்க்க இதயம் கனக்கிறது. மனம் ஏங்குகின்றது
[illegible] உங்கள் நினைவுகள்
எங்கள் இதயத்தில் எப்போதும் நிலைத்திருக்கும்.

### 10ஆம் ஆண்டு

மலர்வு
15 . 01 . 1930



உதிர்வு
09 . 03 . 2014

**கந்தசாமி மங்கையர்க்கரசி**
(திதி: நவமி)

என்றும் உங்கள் நினைவுகளுடன்...
குடும்பத்தினர்.

(CS/1034) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### தம்பாட்டி அமெ.மிஷன்

# நீச்சல் போட்டியில் 18 பதக்கங்கள்



யாழ்ப்பாணம், ஜூலை 31

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையேயான நீச்சல் போட்டியில் ஊர்காவற்றுறை தம்பாட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை 18 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளது.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான நீச்சல் போட்டி கிளிநொச்சியில் அண்மையில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் 13 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் டென்ஸில் ராஜ் 2 தங்கம் 1 வெள்ளி, கனிமுகிலன் 2 தங்கம் 1 வெள்ளி, கனிஷ்ரா 1 தங்கம், யனுஷன் 3 வெள்ளி, நிஷாந்த் 1 வெள்ளி, 1 வெண்கலம். சனுசா 1 வெள்ளிப் பதக்கங்களை கைப்பற்றினர்.

றிலே நீச்சல் போட்டியில் 14 வயது மற்றும் 16 வயதுப் பிரிவில் ஆண்கள் அணிகள் தலா இரண்டு வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றன.

ஒட்டுமொத்தமாக இந்தப் போட்டியில் 5 தங்கப் பதக்கங்களையும் 11 வெள்ளிப்பதக்கங்களையும். 2 வெண்கலப் பதக்கங்களையும் தம்பாட்டி

அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை கைப்பற்றியது. (ச-27)




## INVITATION FOR BID
### Council Fund Work -2024
### VENGALACHEDDIKULAM PRADESHIYA SABHA

1. The Chairman, Local Authority Procurement Committee on behalf of the Secretary, Vengalacheddikulam Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure. Since the total cost estimate of this procurement is below Rs.50 Mn, Regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016(ii)
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and as per the Public finance Circular No 04/2016 (iii) dated on 18.02.2021. This IFB is limited for the Bidders who have been required CIDA registration as mentioned below in the table and possess valid business or company registration within Northern Province.
4. Eligible bidders may obtain further information from **Secretary, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar-Madawachy Road, Cheddikulam. (T.P No: 024-2260055 / 024-2260914, Fax: 024-2260913, E-mail - techvckps@gmail.com / cheddips@gmail.com)** and inspect the bidding Documents at the same address on **31.07.2024 to 13.08.2024 from 9.00 hrs to 14.00 hrs.**
5. Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5).
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, **Vengalacheddikulam Pradeshiya Sabha Mannar-Madawachy Road, Cheddikulam** from 31.07.2024 until 13.08.2024 from 9:00 hrs to 14:00 hrs upon payment of non-refundable fees of **Rs. 3,000.00** for each bidding document. The method of payment should be by cash.
7. Bids shall be delivered with duplicate to the address below at Chairman, Local Authority Procurement Committee, Vengalacheddikulam Pradeshiya Sabha under Register post or bids shall be deposited in the "Tender Box" available in the **Vengalacheddikulam Pradeshiya Sabha Office on or before 14:00hrs on 14.08.2024.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their authorized representatives are requested to be present. Please indicate the name of the Construction work and Bid identification Number should be written on top left hand corner of the envelop.
8. Bid shall be Valid up to 30.10.2024
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| S. No | Bid No | Details of Works | Estimated cost (Rs.Mn) | Contract period | Required grade | Bid validity Period | Required bid security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Bid Security (Rs.) | Validity Period |
| 01 | NP/14/43 (6)/5/3-1 (01)/2024 | Renovation of Adappankulam Illupaikulam Road (NVVPE 311), Renovation of Koramoddai Road , Renovation of Thuvarankulam Road (NVVPE 039) | 6.32 | 84 Days | C7 and C6 highway | 77 Days (30.10.2024) | 63,000.00 | 27.11.2024 |

10. Pre Bid meeting will be held at Vengalacheddikulam Pradeshiya Sabha Cenferance hall at 10:30 hrs on 07.08.2024

**Chairman,**
**Local Authority Procurement Committee,**
**Vengalacheddikulam Pradeshiya Sabha.**
**31.07.2024**

(CR/43009) 1-1

# யாழ். இந்து '08' பிரிவு மாணவர்களால் உதவி



யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 2008ஆம் ஆண்டு பிரிவு பழைய மாணவர்களால் திருநெல்வேலியிலுள்ள சிறுவர் இல்லத்துக்கு கடந்த சனிக்கிழமை உதவி வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில், 2008ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரம் கற்ற மாணவர்கள், 'மீண்டும் பள்ளிக்குச் செல்வோம்' என்னும் தொனிப்பொருளில் தமது ஒன்றுகூடலை, யாழ். நகரிலுள்ள விடுதியில் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தியிருந்தனர். இதன்போது தமக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கும் மதிப்பளித்திருந்தனர்.

ஒன்றுகூடலின் ஓர் அங்கமாக சமூகநலத் திட்டமும் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கு அமைவாக திருநெல்வேலியிலுள்ள கருணாலயம் பெண்கள் சிறுவர் இல்லத்தின் கோரிக்கைக்கு அமைவாக ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆடைகள் வழங்கப்பட்டன. அத்துடன் சிறுவர் இல்லத்துக்கு மதியபோசனத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் இ.செந்தில்மாறன் பங்கேற்றிருந்தார். அவர் உத்தியோகபூர்வமாக ஆடைகளை இல்லத்தினரிடம் கையளித்ததுடன், 2008ஆம் ஆண்டு பிரிவு மாணவர்களால் சிறுவர் இல்லப் பிள்ளைகளிடம் அவை ஒப்படைக்கப்பட்டன.

இந்துக் கல்லூரி அதிபர் இ.செந்தில்மாறன் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு, பாடசாலை மாணவிகளின் சுயகற்றலுக்குத் தேவையான உதவிகள் வழங்குவதாகக் கூறியதுடன், பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அக்கராயன் மகா வித்தியாலயம் மூன்றாவது முறையாகவும் சம்பியன்



மூன்றாவது தடவையாகவும் வடமாகாண சம்பியனாக அக்கராயன் மகா வித்தியாலயம் 17 வயதுப் பிரிவு அணி கைப்பந்துப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வடமாகாணப் போட்டியிலே அக்கராயன் மகா வித்தியாலயம் சம்பியனாகியுள்ளது. கடந்த 2022 ஆம், 2023 ஆம் ஆண்டுகளிலும் இதே வயதுப் பிரிவு, வடமாகாண சம்பியனாக தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது. (ப-13)

# ஒற்றுமையின் பலத்தால் எமது மண்ணை மீட்போம்



## செல்வம் எம்.பி. சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 31**

**வடக்கு- கிழக்கில் தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்தார்கள் என்கிற வரலாற்றை சிதைக்கும் வகையில் இன்று தென்னிலங்கை திட்டமிட்டு பல விடயங்களை அரங்கேற்றி வருகிறது. எமது ஒற்றுமை இன்மை காரணமாக எமது மக்களையும் மண்ணையும் நாங்கள் இழந்து விடக்கூடாது.**

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டில் பல படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. ஆயுதப் போராட்டம் தற்போது மௌனிக்கப்பட்டுள்ளது.

அகிம்சை ரீதியான போராட்டங்களை முன்னெடுத்து எமது இனத்தின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரும் கால கட்டத்தில் இருக்கிறோம்.

எமது மக்களின் நிலங்கள், கடல் வளம், மண் என்பன அபகரிக்கப்படுகின்றன. எமது ஒற்றுமை இன்மையால் எமது வரலாற்றை காவு கொடுக்கிற நிலைப்பாடு தோன்றும். எனவே எல்லாக் கட்சிகளும் ஒன்றிணைந்து மக்களின் விடுதலைக்காக செயற்பட்டு எமது மண்ணை மீட்டெடுக்க வேண்டும். எமது ஒற்றுமையின்மை காரணமாக எமது மக்களையும் மண்ணையும் நாங்கள் இழந்து விடக்கூடாது- என்றார். (ச-25,56)

## செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 31

சர்வசக்தி முன்பள்ளியின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு, சர்வசக்தி சனசமூக நிலைய உப தலைவர் மதன் பிரசாந்து தலைமையில் முன்பள்ளி முன்றலில் இன்று புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் தலைவரும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ஊரெழு கணேசா வித்தியாலய அதிபர் இரா.ஜெயக்குமார், ஜே/267 ஊரெழு கிழக்கு கிராமசேவையாளர் மகாதேவா ஞானேந்திரன், தெல்லிப்பழை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அனஸ் ரீன் கிருஷா தமிழீழ மக்கள் விடுதலைக்கழக அமைப்பின் முக்கியஸ்தரும் பிரதேசசபை முன்னாள் உறுப்பினருமான இராசேந்திரம் செல்வராஜா எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)



யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவத் திணைக்களத்தின் அனுசரணையுடன், 'உள்ளூர் பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான தேசிய மூலோபாயம்' எனும் தலைப்பில் வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ளூர் இடர் அபாயக் குறைப்புத் திட்டம் ஏற்பாடு செய்த கலந்துரையாடல், சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ப-66)

## சம்பள முரண்பாடு நிவர்த்தி; இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 31

ஜனாதிபதி அலுவலகத்தினால் கோரப்பட்ட சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்தல் சார்பாக முன்மொழிவுகள் சம்பந்தமான அவசர கலந்துரையாடல், வடமாகாணக் கீழ் உழைப்புப் பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள மேற்படி சங்கத்தின் பணிமனையில் நடைபெறவுள்ளது.

கலந்துரையாடலுக்கு வருகை தரும் சகல கீழ் உழைப்புப் பட்டதாரிகளும் www.presidentsoffice.gov.lk எனும் ஜனாதிபதி அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள முகவரியிலிருந்து விண்ணப்பப் படிவத்தைத் தரவிறக்கம் செய்து உரிய ஆவணங்களுடன் பூரணப்படுத்தி குறித்த கலந்துரையாடலின் போது சமர்ப்பிக்குமாறும், மேலதிக தகவல்களுக்கு 074101101, 0779967142 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் வடமாகாணக் கீழ் உழைப்பு பட்டதாரிகள் சங்க நிர்வாகத் தினர் கேட்டுள்ளனர். (ப-66)

## முல்லைத்தீவு பாரதிபுரம் மாணவர்களுக்கு தங்கம்



வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே போட்டியில் முல்லைத்தீவு பாரதிபுரம் பாடசாலை மாணவர்கள் இருவர் சாதனை படைத்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கட்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாகாணப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கராத்தே போட்டியில் முல்லைத்தீவு பாரதிபுரம் மகா வித்தியாலயத்தில் 18 வயதுப் பிரிவில் சு. நிலக்சன், 20 வயதுப் பிரிவில் ர.மதுமிதா ஆகிய இருவரும் 1 ஆம் இடத்தைப் பெற்றுத் தங்க பதக்கங்களையும் தமதாக்கிக் கொண்டனர். (ப-13)



பிரதேச சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முயற்சியாகச் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கைத்தொழில் பிரிவு உத்தியோகத்தர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மாதாந்தச் சந்தை நிகழ்வு கடந்த திங்கட்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலக முன்றலில் நடைபெற்றது. (ச-66)

அநுரவின் மாநாட்டில்

## தாதியர் சீருடையுடன் பங்கேற்றது தேர்தல் விதிமுறை மீறலாம்!

தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுர குமார திஸாநாயக்காவின் தலைமையில் இடம்பெற்ற தாதியர் சங்க தேசிய மாநாட்டில் சீருடையுடன் தாதிகள் பங்கு பற்றியமை தேர்தல் விதி மீறல் என தேர்தல் கண்காணிப்பு நிறுவனமான கபே தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கபே தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தாபன விதிக்கோவையின் பிரகாரம் மக்களின் வரிப்பணம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. மற்றொரு தேர்தல் கண்காணிப்பு நிறுவனமான பவ்ரலும் இந்த விடயத்தை தேர்தல்கள் ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளது. (ஓ-22,6)



யாழ்.மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் உணவுத் திருவிழா மற்றும் விற்பனைக் கண்காட்சி அடுத்த மாதம் 5 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை யாழ். முற்றவெளிப் பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ளன. அது தொடர்பாக தொழில் முயற்சியாளர்களுடனான முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. (ஒ-25,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவு.வில் கவனவீர்ப்பு

கிளிநொச்சி, ஜூலை 31

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டுள்ள உறவினர்கள் கவனயீர்ப்பு போராட்ட மொன்றை நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுத்தனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது. காலம் தாமதிக்காது சர்வதேச நீதி கிடைக்க வேண்டும், தமக்கு நிதி தேவையில்லை நீதியே தேவை, காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டுபிடித்து தரவேண்டும் என பதாகைகளை ஏந்தியும் கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-110)

# கத்தி வெட்டில் இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 31

பருத்தித்துறை, சந்தை மேற்கு ஒழுங்கையில் இடம்பெற்ற கத்தி வெட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சீனிவாசன் கிருபாகரன் (வயது-26) என்பவரே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-100)



சாவகச்சேரி, புவேந்தன் முன்பள்ளி நிலையத்தின் வருடாந்த விளையாட்டு விழா, நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் கடந்த சனிக்கிழமை பி.ப. 1 மணிக்கு இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா சுனில் ஆரியரத்னா, முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ப-159)

# பொருளாதாரம் வலுவடைவு பயணத்தில் கைகோருங்கள்

## ஜனாதிபதி தெரிவிப்பு


கொழும்பு, ஜூலை 31

கடந்த காலங்களை விட இன்று இலங்கை ரூபா வலுவடைந்துள்ளது. வட்டி வீதம் குறைகிறது. இந்தப் பயணத்துடன் தொடர்ந்தும் செல்ல அனைவரும் கைகோர்க்க வேண்டும் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்போது உதவிகள் கிடைக்கின்றன. நாட்டை முன்னேற்ற வழி கிடைத்துள்ளது. நாட்டு மக்களைப் போலவே இளையோரின் எதிர்காலம் பற்றியும் சிந்திக்கவேண்டும். நாட்டுக்கு இன்னும் பல முதலீடுகளைக் கொண்டு வர வேண்டும். தொழிற்சாலைகளைக் கொண்டு வர வேண்டும். இன்று நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தி 85 பில்லியன் டொலர்களாகக் காணப்படுகிறது. இந்த தசாப்தத்தின் இடைப்பகுதியில் அதனை 350 பில்லியன் டொலர் வரையில் அதிகரிக்கவேண்டும். அதனை நான்கு மடங்காக அதிகரிக்கும் இயலுமை எம்மிடம் உள்ளது - என்றார். (ச)

# மரண அறிவித்தல்



தோற்றம் 02.09.1945

மறைவு 30.07.2024

## காசிவிஸ்வநாதன் கணேசமூர்த்தி

**(ஓய்வுபெற்ற வர்த்தக வங்கி உத்தியோகத்தர்)**

குரு வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை மற்றும் 'முருகனகம்' வாளித்தொழிற்சாலை ஒழுங்கை, மாவிட்டபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட காசிவிஸ்வநாதன் கணேசமூர்த்தி (ஓய்வுபெற்ற வர்த்தக வங்கி உத்தியோகத்தர்) அவர்கள் நேற்று (30.07.2024) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிவிஸ்வநாதன் (ஓய்வுபெற்ற வர்த்தக வங்கி உத்தியோகத்தர்) - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கமலாதேவி தம்பதியரின் மருமகனும், புவனராணியின் அன்புக் கணவரும், கஜபதி (முகாமையாளர், Speed IT Net), இமயவன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசிகா (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்), றிபேக்கா (நோர்வே) ஆகியோரின் மாமனாரும், டிநேசன் (மாணவன், மகாஜனக் கல்லூரி), மாயா (நோர்வே), சாரா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் பரமேஸ்வரி, அமரர் தேவிகாராணி, லோகநாயகி மற்றும் ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் சகோதரனும், சாந்தி, நிர்மலா, சிவபாலன் மற்றும் உமைபாலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2024) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தச்சன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் -2024

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மாநகர சபையின் நானாவித இறை வரிப்பகுதியில் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

- கேள்விப்படிவக்கட்டணம் : ரூபா 1,000.00 + Vat 18%
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி :- 31.07.2024 தொடக்கம் 07.08.2024 வரை **(ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாட்களில் மு.ப 9.00 - பி.ப 2.30 மணி வரை)**
- கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் :- **08.08.2024 முற்பகல் 10.00 மணி வரை**
- கேள்விப்படிவம் திறத்தல் :- **08.08.2024 முற்பகல் 10.00 மணிக்கு**
- மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் :- **ஆரம்ப கேள்வித் தொகையின் 2% அல்லது ரூபா 2,000.00 இத் தொகைகளில் கூடிய தொகை**

- விண்ணப்பப் படிவங்கள்யாவும் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு நானாவித இறைவரி பகுதியில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் **08.08.2024 முற்பகல் 10.00 மணிக்கு** முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.
- கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் கடிதம் மூலம் அனுமதியளிக்கப்பட்ட ஒருவர் சமுகமளித்தல் வேண்டும்.
- கேள்வியில் சித்தி பெற்றவர்கள் தாங்கள் சித்தி பெற்ற சகல கடைகளுக்குமான கேள்வித் தொகையினை 14.08.2024ம் திகதி 2.30 மணிக்கு முன்னர் முன்னரங்கப் பகுதியில் முழுமையாக செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். தவறும் சந்தர்ப்பத்தில் தாங்கள் எந்தவொரு கடையையும் பெற்றுக்கொள்ள முடியாது
- கேள்விகோரலில் சித்தியடைந்தோர் 14.08.2024ம் திகதி 2.30 மணிக்கு முன்னர் கேள்வித்தொகையினைச் செலுத்தத் தவறிய கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(CR/43010) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10...

சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சில நாள்களுக்கு முன்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் இலங்கைக்குத் திடீரென வந்து சென்றுள்ளார் எனத் தகவல் கிடைத்துள்ளது. குறுகியகாலப் பயணமாக வந்துள்ள அவர் ஜனாதிபதியைச் சந்தித்தும் பேச்சு நடத்தியுள்ளார்.

10 புரிந்துணர்வு உடன்படிக்கைகள் தொடர்பில் ஜெய்சங்கர் இணக்கப்பாட்டை எட்டியுள்ளார். இதில் கையொப்பமிடுவதற்காகவே இந்தியப் பிரதமர் மோடி இலங்கை வருகின்றார். அடுத்த மாதம் இலங்கை வருவதற்குரிய சாத்தியம் அதிகமுள்ளது.

பூகோள இணைப்பு (ராமர் பாலம்), இலங்கையில் உள்ள பலாலி விமான நிலையம் உட்பட விமான நிலையங்களை இந்திய நிறுவனங்களின்கீழ் கொண்டுவருதல், இந்திய நாணயப் பயன்பாடு, மின் இணைப்பு, எரிபொருள் இணைப்பு, சுங்கப்பிரிவு இணைப்பு, திரைப்பட இணைப்பு என்பனவை மையப்படுத்தியே புரிந்துணர்வு உடன்படிக்கைகள் அமைந்துள்ளன. மேற்படி ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டால் அவற்றில் இருந்து விடுபடுவது கடினம். எனவே, இவற்றைத் தடுப்பதற்கு அனைத்து சக்திகளும் முன்வர வேண்டும். மகாசங்கத்தினரும் அவதானம் செலுத்தி, உரிய நடவடிக்கையை முன்னெடுக்கவேண்டும் - என்றார். (அ-ச-44)

## ரணிலை...

நாணயக்கார தெரிவித்தார். அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்தும் உரிமை அதற்கான முயற்சியில் ஈடுபடும் தரப்புகளுக்கு உள்ளது. ஆனால், அந்தக் கோரிக்கைகள் இன்னும் பேச்சு மட்டத்திலேயே உள்ளன. இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றே அறியமுடிகின்றது. எவ்வாறிருப்பினும் வடக்கு - கிழக்கு நிலைவரம் ஜனாதிபதி ரணிலுக்குச் சாதகமாக உள்ளது. அவர் தலைமையிலான அரசு முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர்.

தெற்கில் பாடசாலைகள் மூடப்பட்டாலும் வடக்கில் மூடப்படுவதில்லை. அங்குள்ள மக்கள் நேர் சிந்தனையில் உள்ளனர். தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆதரவும் ஜனாதிபதிக்குக் கிடைக்கும் என நம்புகின்றோம். அதற்கான நடவடிக்கை உரிய நேரத்தில் இடம்பெறும். ஆதரவுகோரிக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரம் வழங்குவோம், நாட்டைப் பிரிப்போம் என்றெல்லாம் நாம் கூறி ஆதரவு பெறவில்லை. பொலிஸ் அதிகாரம் அற்ற 13 மற்றும் நல்லிணக்கமே எமது இலக்கும். மாறாக வடக்கில் ஒன்றையும், தெற்கில் வேறொன்றையும் கூறுவதில்லை" - என்றார். (அ-ம-44)

## 92 உறுப்பினர்கள்...

ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு நேற்று மாலை வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையிலேயே, இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி ரணிலின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் செயற்படுவதற்குத் தயாராக இருப்பதாக அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர் என்றும் ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின்போது, ஜனாதிபதி ரணிலை ஆதரிப்பதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் பொதுஜன பெரமுனவினர் நேற்றுமுன்தினம் சந்திப்புக் கலந்துரையாடலை நடத்தியிருந்தனர். இதன்போது, ரணிலை ஆதரிப்பதில்லை என்றும், தனியான வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது எனவும் பெரமுன தீர்மானித்தது.

இதன் பின்னர், எக்ஸ் தளத்தில் அறிவிப்பொன்றை விடுத்த ஜனாதிபதி ரணில், பெரமுனவால் தனக்கு இது வரை வெளியிடப்பட்ட ஆதரவுக்கு நன்றி தெரிவித்ததுடன், தனக்கு ஆதரவான நிலைப்பாடு உடையவர்களை இணையுமாறும் கோரியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, 92 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணிலை நேற்றுமாலை நேரில் சந்தித்து தமது ஆதரவைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## நீதி...

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் கல்லடியில் உள்ள பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு அலுவலகத்துக்கு விசாரணைக்கு அழைத்திருந்தனர்.

தனிப்பட்ட காரணங்களால் 29 ஆம் திகதி இவ்விசாரணைகளில் கலந்து கொள்ளமுடியாது என பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து, நேற்று 30ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டு மூன்று மணி நேரவிசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்விசாரணையில் ஊடகச் சந்திப்புகளை செய்தமை, பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான போராட்டம், மயிலத்தமடு - மாதவனை பண்ணையாளர் போராட்டத்தில் கலந்து கொண்டமை, பல்கலைக்கழகத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் நிகழ்வில் கலந்து கொண்டமை, ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைத்தமை, சர்வதேச பெண்கள் அமைப்புகளுடன் தொடர்புகளை பேணுகின்றமை, புலம்பெயர் தமிழர்களுடன் தொடர்புகளை பேணுகின்றமை, புலிகளை மீள் உருவாக்குதல் போன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

விசாரணையின்போது, "குற்றச்சாட்டப்பட்டவர்களை விசாரிக்காது, பாதிக்கப்பட்டவர்களை அச்சுறுத்தும் விதமாக, பாதிக்கப்பட்டவர்களை குற்றவாளிகளாக்கும் முனைப்புடன் அரச புலனாய்வு கட்டமைப்புகள் செயற்பட்டுவருகின்றன. எமது போராட்டங்களை முடிக்க நினைக்கின்றன. ஆனால் எமது போராட்டங்களை எமது உறவுகளுக்கான நீதி கிடைக்கும் வரை, மீளவும் கடத்தல் சம்பவங்கள் எமது இனத்திற்கு நடக்காது என்பதனை உறுதிப்படுத்தும் வரை எமது போராட்டம் தொடரும் என்பதனை உறுதிப்படக்கூறியுள்ளேன்" என வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தலைவி அமலநாயகி அமலராஜ் தெரிவித்துள்ளார். (அ-ஒ-66-100)

## மூன்று...

சபை அதிகாரிகளுக்கு அறிவித்து, அனைவரினதும் கூட்டு முயற்சியின் விளைவாகவே தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக்காலமாகத் தொடர்ச்சியாக தீவிபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. எனினும், முல்லைத்தீவுக்கென தனியான தீயணைப்புப் பிரிவு இல்லை. மாவட்டத்தின் நிலையைக் கருத்திற்கொண்டும், இங்கிருக்கும் தீப்பரவல் ஆபத்துகள் காரணமாகவும், தனியான தீயணைப்புப் பிரிவொன்று வழங்கப்படவேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ-ம-19)

## ரூ. 20 லட்சத்துடன்...

மீட்கப்பட்டவராவார். உயிரிழந்த இளைஞர் கனடாவுக்குச் செல்வதற்குத் தயாராக இருந்தவர். அவர் நேற்றுமுன்தினம் இரவு 20 இலட்சம் ரூபா பணத்தை பாண்டியன் குளத்துக்குக் கொண்டு சென்றுள்ளார். இரவு 8.40 மணிக்குப் பின்னர் அவருடைய திறன்பேசி செயலிழந்துள்ளது. இதையடுத்து அவருடைய நண்பர்கள் தேடுதலில் ஈடுபட்ட போது, குளக்கரையில் அந்த இளைஞனின் மோட்டார்சைக்கிள் நிறுத்தப்பட்டிருந்தது தெரியவந்தது. தொடர்ச்சியான தேடுதலின்போது குளத்தின் நீர்கொட்டும் பகுதியில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பாண்டியன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-66-19)

## சிறுமி...

செய்த குற்றச்சாட்டில் 31 வயதுடைய இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

16 வயதான சிறுமி மீதே இவ்வாறு துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த சிறுமி உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் சென்றபோது, அங்கு சட்டமருத்துவ அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சிறுமியிடம் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையிலேயே, புதுக்குடியிருப்பு, திம்பிலி பகுதியினைச் சேர்ந்த 31 வயதுடைய இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (அ-ம-19)

## புத்தகப்...

இருப்பதை அவதானித்த ஏனைய மாணவர்கள், அது தொடர்பில் அதிபரிடம் தெரிவித்துள்ளனர். மேலதிக நடவடிக்கைகளுக்கு அமைய, மாணவனின் பையில் இருந்த கஞ்சாப் பொதி மீட்கப்பட்டதுடன், மாணவர் முல்லைத்தீவு மாவட்ட சட்டமருத்துவ அதிகாரியின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். இதன்போது, அவர் கஞ்சா பயன்படுத்தியதில்லை என்பது தெரியவந்தது.

மாணவனிடம் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் விசாரணையில், அவனுடைய பெற்றோர் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வருபவர்கள் என்று மாணவன் வாக்குமூலம் வழங்கியுள்ளான். இதனடிப்படையில், மாணவனின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார், அவனின் தாயாரை நேற்றுமுன்தினம் கைது செய்தனர். தந்தை வீட்டிலில்லாத நிலையில், அவரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-19)

## பெரமுனவின்...

தெரிவித்தார். இது தொடர்பில் உதயங்க வீரதுங்க மேலும் தெரிவித்ததாவது:-

"பெரமுன ரணிலை ஆதரிக்காது என ஓராண்டுக்கு முன்னரே நான் கூறினேன். அது நேற்று (நேற்று முன்தினம்) நடந்தது. அதேபோல பெரமுனவின் வேட்பாளர் தம்மிக்க பெரேரா என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றேன். பொருளாதாரத்தை அவரால் மட்டும்தான் மீளக் கட்டியெழுப்ப முடியும்.

பஸில் ராஜபக்ச ரணிலை நம்பினார், ஆனால் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்ற உறுதிமொழியை ரணில் விக்கிரம சிங்க மீறிவிட்டார். அதனால் அதற்கான பதிலடியை பஸில் தற்போது கொடுத்துள்ளார். தம்மிக்க பெரேராவை ஜனாதிபதி ஆக்கிவிட்டே பஸில் தனது ஆட்டத்தை நிறுத்துவார். அடுத்த ஆட்சியில் நாமல் ராஜபக்சவே பிரதமர். ரணில் விக்கிரமசிங்க 4ஆவது இடமெனில் தேர்தலில் போட்டியிடமாட்டார். இது தொடர்பில் அவர் 14ஆம் திகதி அறிவிக்கக்கூடும். அப்போதுதான் ரணிலை நம்பிச் சென்றவர்களுக்கு மீண்டும் எம்மை தேடிவர நேரிடும்" - என்றார். (அ-ம-44)

## ரணிலுக்காக...

பொதுஜன பெரமுனக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்படி கம்பஹா மாவட்டத் தலைவரான பிரசன்ன ரணதுங்க, காலி மாவட்டத் தலைவரான ரமேஷ் பத்திரண, கண்டி மாவட்டத் தலைவரான மஹிந்தானந்த அளுத்கமகே, அநுராதபுர மாவட்டத் தலைவர் எஸ்.எம்.சந்திரசேன உள்ளிட்டவர்கள் நீக்கப்படவுள்ளனர். அவர்களுக்குப் பதிலாக புதிய மாவட்டத் தலைவர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர். (அ-ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கொரியாவில் தோல்நோய்

சியோல், ஜூலை 31
தென்கொரியாவில் அதிக வெப்பம் காரணமாக, தோல்நோயொன்று தீவிரமாகப் பரவி வருகின்றது. மூன்று நாள்களில் சுமார் 100 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தென்கொரிய சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. (ம)

# சு.க.வின் வேட்பாளர் இன்று அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 31
சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இன்று அறிவிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.
சுதந்திரக் கட்சியின் ஊடக அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் துமிந்த திஸநாயக்க, தமது ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக இன்று அறிவிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.
'மைத்திரிபால சிறிசேனவுக்கும், தயாசிறி ஜயசேகரவுக்கும் கட்சியைப் பற்றி கதைக்க அருகதையில்லை. விஜயதாஸ ராஜபக்ச தேவையற்றவிடயங்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றார்' என்று துமிந்த மேலும் குறிப்பிட்டார். (ஒ-6)

## விசாவுக்கான Show money
வங்கி இருப்பு உறுதிப்படுத்தித் தரப்படும்.
1%
- visit visa
- student visa
- fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்.
(CS/53565) J-1
தொடர்பு:- 075 033 6759

## தேவை
யாழ். நகரப் பகுதியில்
**நிறுவனம் ஒன்றிற்கு கார் செலுத்தும் சாரதி தேவை.**
சம்பளம் நேரில்
பேசித் தீர்மானிக்கப்படும்.
(CS/55814) J-1
077 248 4360

## காணி விற்பனை
கொழும்புத்துறை வீதி, 8ம் வட்டாரம், யாழ்ப்பாணத்தில், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திற்கு முன்பாக 1 1/2 **பரப்பு சுற்று மதில்கள் கொண்ட உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு.**
(CS/28281) J-1
077 030 4011

## வேலையாட்கள் தேவை
யாழ். நகரில் இயங்கி வரும் பிரபல
**ஹோட்டல்களுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்** (Securities)
**தேவைப்படுகின்றார்கள்.**
**ஆண், பெண் இருபாலாரும்.**
தொடர்புகளுக்கு :-
(CS/55810) J-1
HR- 076 624 8529, 077 780 3203

## வங்கி மீதி வசதி (SHOW MONEY)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
(CS/9881) J-1
074 173 7684



## நீச்சல் போட்டியில்
# கிளி.மத்திய கல்லூரி தேசியத்துக்குத் தெரிவு

கிளிநொச்சி, ஜூலை 31
கிளிநொச்சி மத்திய கல்லூரியின் 18 வீரர்கள் நீச்சல் போட்டியில் வெற்றி பெற்று தேசியப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
வடக்கு மாகாண நீச்சல் போட்டி கிளிநொச்சியில் நடைபெற்றது. இந்தப் போட்டியிலேயே 18 வீரர்கள் வெற்றி பெற்றனர். 5 முதலிடம், 7 இரண்டாம் நிலை, 6 மூன்றாம் நிலை பதக்கங்களை வென்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச-13)

# 'யாழ். விருது' பெறுகிறார் மருத்துவ நிபுணர் சரவணபவா

யாழ்ப்பாணம், ஜூலை 31
யாழ்.மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழு ஆண்டு தோறும் வழங்கி வருகின்ற உயர் விருதான யாழ். விருதை இம்முறை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மகப்பேற்று மருத்துவ நிபுணர் நமசிவாயம் சரவணபவாவுக்கு வழங்குவதென யாழ்.மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. (ம-66)

## காணி விற்பனைக்கு
**கைதடி - நவபுரம் வீதி முகப்புடன் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. ஆவணங்கள் அனைத்தும் சட்டரீதியாக 100% சரியாக உள்ளன.**
- **நன்னீர் வசதி உண்டு.**
- **சிறந்த சுற்றுச் சூழல்.**
- **1 பரப்பு - 8 லட்சம்.**

விலை நேரில் பேசித்தீர்மானிக்கலாம்
மேலதிக விபரங்களுக்கு :-
(CS/55818) J-1
076 659 0583, 077 612 2971

## காணி விற்பனைக்கு
- கொழும்புத்துறை விதானையார் வீதியில்
- 2 1/2 பரப்புக் காணி 4 பக்கமும் சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு.
- 1 1/4 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும்
- சிறந்த சுற்றுச் சூழல்
- நல்ல நீர் ஊற்று
- A9 வீதி 7 நிமிடம்
- கச்சேரி 10 நிமிடம்
- சுண்டுக்குழி, சென் ஜோன்ஸ் பாடசாலைகள் 7 நிமிடம்

தரகர் தேவையில்லை.
காணி உரிமையாளர்
076 659 0583

- யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதான வீதியில் காப்பற் வீதி முகப்பு 200 அடியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- எந்தவொரு வியாபார நோக்கத்திற்கும் சிறந்த காணி.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

காணி உரிமையாளர்
076 659 0583, 070 575 8086

# பரிசளிப்பு விழா

யாழ்., ஜூலை 31
யாழ்.மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அதிபர் எஸ். இந்திரகுமார் தலைமையில் தந்தை செல்வா கலையரங்கில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கரைச்சிப் பிரதேச செயலாளரும், பழைய மாணவருமான ரி.முகுந்தன், சிறப்பு விருந்தினராக சுசைன் டீ.பிரைவேட் லிமிட்டெட்டின் முகாமையாளரும் பழைய மாணவருமான பி.விஜயானந்தன், கௌரவ விருந்தினர்களாக கல்லூரியின் 1998 ஆம் ஆண்டு உயர்தரப்பிரிவு பழைய மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-25)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.07. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.